1971 டிசம்பர் 16]

திருச்சிராப்பள்ளி ;
திருப்பூர்;
விக்கிரமசிங்கபுரம் ;
தூத்துக்குடி ;
திருநெல்வேலி .
ராஜபாளையம் ;
சேலம்;
மேட்டூர் ;
உருக்குநோய் மருத்துவமனை, மதுரை ;
உருக்குநோய் மருததுவமனை, கோயமபுத்தூா ;
உருக்குநோய் மருத்துவமனை, சென்னை (2).

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்படி தொழிலாளர் மருத்துவமனைகளை அமைக்கும் காரியம் கடந்த நான்கைந்து ஆண்டுக்காலமாக நிறுத்தப்பட்டு விட்டது. நம்முடைய அரசாங்கம் ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனை வற்புறுத்தி, தொழிலாளர்கள் மிகுந்திருக்கும் திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட திட்டம் ஒன்று கைவிடப்பட்டிருக்கிறது, அதைக் கட்டுவதற்கு முயற்சியெடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இதைப் பற்றி ஈட்டுறுதிக் கார்ப்பொரேஷனிடத்திலே நமது அரசாங்கம் கடிதப்போக்குவரத்திலேயும், நேரிடையே சந்தித்தும் வற்புறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுகிய கால வினா

கீழ் வெண்மணியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்.

* **குறுகிய கால வினா எண் 2—திரு. டணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் வெண்மணி கிராமத்தில் ஹரிஜனங்களுக்குக் காலனி அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

(இ) எற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது பேய் மழையின் காரணமாக விடிமுந்து நிற்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) மேற்படி திட்டத்தில் தாமதம் ஏற்பட முக்கியமான காரணம் பின் வருமாறு. திவிபத்தால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்கள் 9—11—1969 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசின் நில ஆர்ஜித உத்தரவின் மீது ரிட் மனு தாக்கல் செய்ததால், நில ஆர்ஜிதம் செய்வதற்குத் தாமதம் எற்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் 23—6—1971 அன்று அரசுக்கு அனுப்பிய

கடிதத்தில் சென்னை உயர்நீதி மன்றம், மேற்படி திட்ட மனுவை 10—2—1971 அன்று தள்ளுபடி செய்துவிட்டதெனவும், அந்நிலத்தில் அரிசனங்களுக்கு வீடுகட்டுவதற்கான உத்திரவை பிறப்பிக்குமாறும் அரசிடம் கோரியதின் பேரில் அரசு தனது ஆணை 1334 (நிலை) தேதி 18—11—1971-ல் ரூ. 51,200 செலவில் 32 வீடுகள் கட்டுவதற்கான உத்திரவு பிறப்பித்துள்ளது.

திரு. மணலி. சி. கந்தசாமி : தலைவரவர்களே, கீழ்வெண்மணி சம்பவத்தின் தன்மையை வைத்துப் பார்க்கும்பொழுது, ஏற்பட்டிருக்கும் காலதாமதம் பெரிய அளவிற்கு சமுதாயத்திற்கு ஒரு வருத்தத்தை ஏற்படுத்தி விடுவதால், சீக்கிரமாக அதைக் கட்டுவதற்கு விசேஷ நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முதலில் இந்த இடம் வேண்டாம், வேறு இடத்திற்குச் செல்கிறோம் என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே, வேறு இடம் பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு இதே இடத்திலே வீடு கட்டிக்கொடுங்கள், இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்காக இந்த இடத்தை எடுக்க முடிவு செய்த பிறகு, நிலத்தின் சொந்தக்காரர்கள் கொடுக்க மறுத்து உயர்நீதிமன்றத்திற்கு வழக்குக்குச் சென்றார்கள். வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. அதற்குப்பிறகு கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு எடுத்திருக்கிறது.

அரிசன மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை

* 462 வின.—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின் தங்கிய மாணவர்களுக்கு ஸ்காலர்சிப் ரூ. 15-ம் ஹரிஜன மாணவர்களுக்கு ரூ. 5-ம் அரசாங்கம் உயர்த்தியுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனின், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) அரிசன மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உண்டுறை உதவித்தொகை 1960-ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. பின்தங்கிய மாணவர்களுக்கு 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த தொகையே தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. உண்டுறை உதவித்தொகையை உயர்ந்த செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்தபொழுது, பின்தங்கிய மாணவர்களுக்கும், அரிசனங்களுக்கும் உள்ள வித்தியாசம் தேவையில்லை என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் பின்தங்கிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களைவிட பொருளாதார நிலையில் சற்று மேம்பட்டிருப்பதால் இருவருக்குமிடையே வித்தியாசம் இருப்பது தவறில்லை என்று அரசு கருதியது.